பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 23 | ஞாயிற்றுக்கிழமை | 09.11.2025 | அதிர்வு 102

## டிரக்டர் மோதி சிறுவன் சாவு!



வீதி விபத்தில் 8 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். 06




# மக்களை ஏமாற்றும் 'பட்ஜட்'

## அநுர அரசைக் கடுமையாக விமர்சிக்கும் மஹிந்த அணி

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட 2026 ஆம் நிதியாண்டுக்கானதேசிய மக்கள்சக்திஅரசின்வரவு - செலவுத் திட்டத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது. "மக்களை ஏமாற்றும் விதத்திலேயே வரவு- செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது" - என்று அந்தக்கட்சியின்பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 06

## நுகேகொடைப் பேரணியில் தமிழரசும் பங்கேற்காது!




நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டு எதிரணியின் அரச எதிர்ப்புப் பேரணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கேற்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேரணியில் பங்கேற்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், தாங்கள் அந்தப் பேரணியில் பங்கேற்கமாட்டோம் என்று குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தமது கட்சியும் அந்தப் பேரணியில் பங்கேற்காது என்றும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் கூறியுள்ளனர்.




இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கமே இந்த நாட்டின் மற்றொரு தேசிய இனமான தமிழர்களுக்கு எதிராக பௌத்த - சிங்கள பேரினவாதம் மேலாண்மை வெறிப் போக்கோடு கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதுதான் இந்தத் தீவின் துன்பியல் வரலாறு.

மிக மோசமாக - மிகக் கொடூரமாக - மிகக் குரூரமாக - மிலேச்சத்தனமாக - காட்டுமிராண்டிப் போக்கில் - வெறி கொண்டு முன்னெடுக்கப்பட்டது பேரினவாதம்.

பஞ்சசீலம் போதித்த புத்த பகவானின் பெயரிலேயே இந்த அடாவடித்தனமும் அட்டூழியமும் இலங்கைத் தீவில் அரங்கேறின.

உலக சரித்திரத்தில் மிக மோசமான விலங்கு மனப்பான்மை மிக்க காட்டுமிராண்டித்தனமாகக் கட்டவிழ்ந்தது பல்லாயிரம் போராளிகள் விதைக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களை புல்டோஸர்கள் கொண்டு உழுது, மண்ணோடு ஐக்கியமான அந்த வித்துடல்களை சிதைத்துச் சின்னாபின்னமாக்கி, அவர்களது நினைவாக நடப்பட்ட 06





### மாவீரர்களை நினைவேந்த தமிழர்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு

# துயிலும் இல்லங்களை விட்டு இராணுவத்தினர் வெளியேறுவர்

### ஜனாதிபதியின் அறிவிப்பை வெளிப்படுத்திய அமைச்சர்

“மாவீரர்களை நினைவுகூர்வதற்குத் தமிழ் மக்களுக்கு முழுச் சுதந்திரம் உள்ளது. இதை எவரும் மறுத்துரைக்க முடியாது. மாவீரர் துயிலும் இல்லங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.”

– இவ்வாறு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“போர்க் காலத்தில் படையினரால் கைப்பற்றப்பட்ட காணிகளைத் தற்போதைய அரசு விடுவித்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாக, மாவீரர் துயிலும் இல்லங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தையும் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துயிலும் இல்லங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை வெளியேற்றுவதற்கு உரிய பொறிமுறைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் பாதுகாப்புச் செயலருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் இடம்பெறும்.” – என்றார்.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட தம்பதியர் மடக்கிப் பிடிப்பு!

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த தம்பதியர், பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா, திவுலப்பிட்டிய பிரதேசத்தில் மேற்படி தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திவுலப்பிட்டிய பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்களான தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி தம்பதியர் தப்பியோட முயன்ற போதிலும் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திவுலப்பிட்டிய – மரதகஹமுல பிரதேசத்தில் வசிப்பவர்கள் ஆவர்.

சந்தேகநபர்களான தம்பதியர் நீண்டகாலமாகத் திவுலப்பிட்டிய, கட்டுவெல்லேகம, துனகஹ, அளுதேபொல, மரதகஹமுல, நெல்லிகஹமுல, நில்பனாகொட, மினுவாங்கொடை ஆகிய பிரதேசங்களில் போதைப்பொருள் விற்பனை செய்து வந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தம்பதியரிடமிருந்து 11 கிராம் 980 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 5100 மில்லிகிராம் ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களான தம்பதியர் மேலதிக விசாரணைகளின் பின்னர் மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

# நுகேகொடை பேரணியில் விமல் அணி பங்கேற்காது



2025 நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெற உள்ள எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் பேரணியில் தேசிய சுதந்திர முன்னணி பங்கேற்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பலகாரணிகளைக்கருத்தில்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்தப் பேரணியில் பங்கேற்கப்போவதில்லை என்று சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அநுர அரசின் பட்ஜட்டில்

# 1,757 பில்லியன் ரூபா நிதிப் பற்றாக்குறை!

## வருமானம் ரூ. 5,300 பில்லியன்
## செலவீனம் ரூ. 7,057 பில்லியன்

தேசிய மக்கள் சக்தி அரசின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஆயிரத்து 757 பில்லியன் ரூபா நிதிப் பற்றாக்குறையுடனேயே முன்வைக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசின் 2026 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இதன்படி, வரி, மானியங்கள் உள்ளடங்களாக மொத்த வருமானமாக 5 ஆயிரத்து 300 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவீனம், வட்டி உட்பட மொத்த செலவீனமாக 7 ஆயிரத்து 57 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆயிரத்து 757 பில்லியன் ரூபா பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த நிதிப் பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியில் 5.1 சதவீதமாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் 4 - 5 சதவீத பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச வருமானம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 15.3 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

2028ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடனைப் பெறுவதற்குரிய இயலுமையை இலங்கை பெறும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களும் உள்ளன. நிதி அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த படியாக பாதுகாப்பு அமைச்சுக்கும், சுகாதார அமைச்சுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பட்ஜட் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நீண்டநேரம் உரையாற்றி இருந்தாலும், புதிய அரசமைப்பு மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் எதுவும் குறிப்பிடவில்லை என்று எதிரணி சுட்டிக்காட்டியுள்ளது.

# ஆபாச காணொலி பதிவு; இளம் தம்பதியினர் கைது

ராஜகிரிய - வெலிக்கடைப் பகுதியில், இணையத்தளமொன்றுக்கு ஆபாச காணொளிகளை பதிவு செய்து வழங்கி வந்த சி ஒரு தம்பதி நுகேகொடை வலய சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான கணவர் தனியார் பல்கலைக் கழகமொன்றில் கணினிப் பொறியியல் பட்டம் பெற்றவர் என்றும்,மனைவி உளவியல் ஆலோசனை டிப்ளோமா பெற்றவர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த தம்பதியினர்,நிதி நெருக்கடி காரணமாக பிரித்தானியாவை மையமாகக் கொண்ட வலைத்தளத்துடன் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒப்பந்தம் செய்து கொண்டு, மாதத்துக்கு 8 காணொளிகளை வழங்கி வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் அவர்களுக்கு மாதமொன்றுக்கு சுமார் ரூபா 1.5 லட்சம் தொடக்கம் 2 லட்சம் வரை வருமானம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மொத்தம் 334 ஆபாச காணொளிகளை பதிவேற்றியுள்ளதாகக் பொலிஸ் உறுதி செய்துள்ளது.

இந்த காணொலிகளை அவர்கள் தமது மூன்று மாடிக் கட்டடத்தின் மேல் மாடியில் உள்ள, குடியிருப்பிலிருந்தே பதிவு செய்துள்ளனர்.

கைதான தம்பதி இன்று கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

# மூன்று குழந்தைகளை பிரசவித்த பெண் சாவு!

## வடமராட்சியில் சோகம்

திருமணம் செய்து 21 வருடங்களாகக் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்த பெண்ணொருவர், ஒரே தடவையில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்த பின்னர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி, வதிரிப் பகுதியைச் சேர்ந்த யோகராஜா மயூரதி (வயது 46) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் 7ஆம் திகதி மூன்று குழந்தைகளைக் குறித்த தாய் பெற்றெடுத்துள்ளார். இதன் பின்னர் சுகவீனமுற்று தொடர்ச்சியாக மருத்துவக் கண்காணிப்பில் இருந்துவந்த அவர், கடந்த வியாழக்கிழமை மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

கிருமித் தொற்றுக் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார்.

அந்தத் தாய் பிரசவித்த குழந்தைகள் மூவரும் நலமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமணம் செய்து மிக நீண்ட காலத்தின் பின்னர் குழந்தைகளைப் பெற்றெடுத்த பெண் உயிரிழந்துள்ள விடயம் வடமராட்சி, வதிரிப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.








# நுகேகொடை பேரணி அரசுக்கு கடும் அழுத்தமாக அமையும்!

## இப்படிக் கூறுகின்றார் நாமல் எம்.பி.

நுகேகொடை அரசியல் சமரானது அரசுக்கு நிச்சயம் கடும் அழுத்தமாக அமையும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி பேரணி இடம்பெறவுள்ளது. இதில் பங்கேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பு குறித்து கட்சிகள் எடுக்கும் முடிவை நாம் மதிக்கின்றோம்.

நுகேகொடை பேரணியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கமாட்டார். எனினும், அவரது ஆசிர்வாதம், ஆதரவு அந்தக் கூட்டத்தக்கு நிச்சயம் இருக்கின்றது. மக்களுக்காகக் களத்தில் இறங்கி போராடிய தலைவர் தான் மஹிந்த ராஜபக்ஷ. அவரின் வழிகாட்டலுடன் எமது பயணம் தொடரும். நுகேகொடை அரசியல் சமரானது அரசுக்கு நிச்சயம் கடும் அழுத்தமாக அமையும்." – என்றார்.

# 2026 ஆம் ஆண்டு பட்ஜட்டில் மலையகத்துக்கான இரு திட்டங்களையும் வரவேற்கின்றது இ.தொ.கா.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மலையகத்துக்கான இரண்டு திட்டங்களும் வரவேற்கத்தக்கவை என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் 2025ஆம் ஆண்டு சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டத்தில் மலையகத்துக்கு இந்திய அரசின் வீடமைப்புத் திட்டத்தைத் தவிர புதிதாக வேறு எந்த வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால், ஜனாதிபதியின் 2026 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது வரவு – செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தக் கொடுப்பனவாக 200 ரூபாவை அரசு வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

மேலும், நுவரெலியாவில் IT Park உருவாக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இந்த இரண்டு திட்டங்களும் அமுல்படுத்தப்படும் நிலையில் மக்களின் வாழ்வாதாரம் உயர்வதோடு, மலையகப் பகுதி IT துறையில் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது. இதன் மூலம் தொழில் துறை வளர்ச்சி அடையும். எனவே, ஜனாதிபதியின் இந்த இரண்டு திட்டங்களும் வரவேற்கத்தக்கவை." – என்றார்.




வட மாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை-2025

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்"
- பிராங்க் லோயிட் றைற் (அமெரிக்க கட்டிடக் கலைஞர், எழுத்தாளர்.)



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடுகற்களை உடைத்து நாசமாக்கி, நிரந்தரத் துயில் கொண்ட போராளிகளை, அவர்களின் துயில் குழப்பி அந்தரிக்க வைத்த பேரினப் பிசாசுக் குணம் அல்லது பேய்த்தனம்.

கொன்றவர்களை மீண்டும் கொன்றொழிக்கும் கொடூரத்தை சைத்தான்கள் கூட செய்யுமா என்பது சந்தேகம்தான். ஆனால் நமது நாட்டில் 'பேரினவாத சைக்கோக்கள்' அதனைச் செய்தன.

கௌதம புத்தரின் உயரிய நெறியை – பஞ்சசீலத்தை – பின்பற்றுவதாக கூறிக் கொண்டு ஓர் அநாகரிகக் கும்பல் இந்த நரவேட்டையை நம் மண்ணில் நடத்தியது.

உயிரிழந்தவர்கள் யாராயினும் அவர்களின் பிரேதத்தை எழுந்து நின்று மதித்து கௌரவிப்பதுதான் மனித பண்புஇயல்பு. அந்த அடிப்படை பண்பியல்பே தெரியாத ஓர் இனக்குழுமம் தன்னை நாகரிக மனித இனமாகக் கருதுவது வேடிக்கையானது.

தன்னோடு போரிட்டு உயிரிழந்த தமிழ் மன்னன் எல்லாளனை கௌரவிக்கும் பண்பியல்பைத்தான் – மனித நாகரிகத்தைத்தான் – துட்டகைமுனு கூட தன் சந்ததியரான சிங்களவர்களுக்கு முன்மாதிரியாக – ஒழுங்கு விதியாக – சொல்லிக் கொடுத்தான். ஆனால் அதைக் கூட பின்பற்றுவதற்கு அறிவற்ற ஒரு சமூகம்தான் இதுவரையில் நம் நாட்டில் ஆட்சியை முன்னெடுத்து வந்தது.

அத்தகைய கொடூர ஆட்சியாளர்களுக்கு, அத்தகைய கொடூர நடவடிக்கைகளுக்கு, 'வீடு எரிக்கும் ராஜாவுக்கு கொள்ளி கொடுக்கும் மந்திரிகளாக' இருந்தவர்கள்தான் இப்போது ஆட்சி பீடத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதும் மறைக்கத்தக்கது அல்ல.

ஆயினும், முன்னைய ஆட்சியாளர்களிலிருந்து தாங்கள் வேறுபட்டவர்கள் என்பதை காட்டுவதற்காக, இந்த நாட்டின் சிறுபான்மை இன மக்கள் இறந்த தம் தமது உறவினர்களுக்கு விளக்கேற்றி நினைவஞ்சலி செலுத்தும் உரிமையை அனுமதிக்கும் அடிப்படை நாகரிகத்தை யாவது வெளிப்படுத்த அவர்கள் முனைகிறார்கள். அது வரவேற்கத்தக்கது.

துயிலும் இல்லங்களை புல்டோஸர் கொண்டு சீரழித்த பேரினவாதச் சிங்களம், அவற்றின் மீது இராணுவ முகாம்களை அமைத்து தனது காடைத்தனத்தையும், மிலேச்சத்தனப் போக்கையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. அந்தத் துயிலும் இல்லங்களில் இருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்றுவதன் மூலமாகவாவது தமிழ் மக்களின் வாக்குகளைத் திரட்ட முடியாதா, அதன் மூலம் அவர்களின் நம்பிக்கையைப் பெற வாய்ப்புக் கிட்டுமா என்ற தந்திரங்களை தேசிய மக்கள் சக்தி இப்போது ஆரம்பித்து இருக்கின்றது.

எது, எப்படியாயினும், தம்மினத்துக்காக தங்களையே தற்கொடையாகத் தந்த உயரிய மாவீரர்களின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட பரிசுத்த மண்ணை சிங்களப் படைகளின் சப்பாத்து கால்களினின்றும் விடுவிப்பது வரவேற்கத்தக்கது. வெப்பியாரத்தோடு இருக்கும் தமிழினத்துக்கு சற்று ஆறுதல் தரும் நடவடிக்கையாக அது இருக்கும் என்பது நிச்சயம்.

இந்த மாவீரர் துயிலும் இல்லங்களின் தோற்றுவாய் குறித்து நமது புதிய தலைமுறைக்குத் தெரியாமல் இருக்கும் என்பதால் எனக்கு நினைவில் நிற்கும் சில நினைவோட்டங்களை இங்கு வழங்கலாம் என்று நினைக்கிறேன்.

இந்திய அமைதி காக்கும் படை வடக்கு, கிழக்கை ஆக்கிரமித்து நிலை கொண்டிருந்த சமயம் அந்தப் படைகளை எதிர்த்து வன்னிக் காடுகளில் நிலை கொண்டபடி போராடி வந்த விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டுதலில் 1989 ஆம் ஆண்டு முதல் மாவீரர் தின அனுஷ்டிப்பைப் புலிகள் தொடங்கினார்கள்.

ஆனால் அந்தக் காலத்திலோ அல்லது 1990 ஆம் ஆண்டில் தமிழர் தாயகத்தின் பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் மீள வந்த பின்னரோ உடனடியாக மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைக்கப்படவில்லை.

ஆரம்பத்தில் மாவீரர்களின் புகழுடல்கள் அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, அவரவர்களது சொந்த இடங்களில் உள்ள மயானங்களில் அவரவரது மத அனுஷ்டானங்கள் படி இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டு எரிக்கப்பட்டன அல்லது புதைக்கப்பட்டன.

இந்திய படைகள் இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னர், புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராக ராஜன் (தற்போது லண்டனில் வசிக்கிறார்) நியமனம் பெற்றார். என் நினைவு சரி என்றால் இது 1990 ஆம் ஆண்டு கடைசி மாதங்களாக இருக்கலாம்.

அவர் இந்தியப் படையின் காலத்தில் ஆரம்பத்தில் சென்னையில் சொற்ப காலமும் பின்னர் யாழ் மாவட்டத்துக்குள் இருந்து தலைமறைவுப் போராளியாகவும் செயற்பட்டவர். அந்தச் சமயங்களில் அவரோடு ஒரு செய்தியாளனாக நான் ஊடாடி இருக்கிறேன்.

யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பதவியை ஏற்ற பின்னர், 1991 நடுப்பகுதியில்தான் மாவீரர்களுக்கென்று தனியான சுடுகாடு ஒன்று அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த முயற்சியை அவர் ஆரம்பித்தார். அப்போதுன் கூட, ஆரம்பத்தில் அதற்கு 'மாவீரர் துயிலும் இல்லம்' என்று பெயரிடப்படவில்லை.

அதுவரை காலமும் மாவீரர்களின் வித்துடல்கள் அவரவர்களது சமய மரபு வழக்கப்படி எரிக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் வந்தமையால், கோப்பாயில் முதல் முதலாக அமைக்கப்பட்ட மாவீரர்களுக்கான மயானத்தில் வித்துடல்களை எரிப்பதற்கான மேடை ஒன்றும் அமைக்கப்பட்டது. அது பின் நாள்களில் மற்றைய மாவீரர் துயிலும் இல்லங்களிலும் அமைக்கப்பட்டனவாயினும் அங்கு போராளிகள் எரிக்கப்படவில்லை.

கோப்பாயில் மாவீரர்களுக்கான மயானத்தை அமைப்பதற்கு அரச காணி இருக்கின்றது என்பதை அடையாளம் காட்டி, அதை ஒழுங்குப்படுத்திக் கொடுத்தவர் தேவா அண்ணன் என்பவர். அவர் இன்னமும் அரியாலையில் வசிக்கின்றார் என்று நினைக்கிறேன்.

போராளியாக செயற்பட்ட கமல் மாஸ்டர் அந்தச் சமயத்தில் வரைபட கலைஞரான ரவி என்பவரை அரசியல் நிர்வாக பொறுப்பாளரான ராஜனுக்கு அறிமுகப்படுத்த அந்த ரவி மூலமே மாவீரர் துயிலும் இல்லத்துக்கான வடிவமைப்பு முதலில் உருவாக்கப்பட்டது. அந்த ரவி பின்னர் லண்டனுக்கு சென்று அங்கு காலமாகிவிட்டார் என அறிந்தேன். அவரோடு இந்த விடயத்தில் செயலபட்ட இன்ஜினியர் காந்தன் அண்ணன் என்பவர் இன்னமும் யாழ் கந்தர் மடத்தில் வசிக்கின்றார் என்று நினைக்கிறேன்.

கோப்பாயில் அடையாளம் காணப்பட்ட இடத்தில் மாவீரர் மயானம் அமைப்பதற்காக அந்த இடம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தில் வரவேற்புப் பெற்ற டியூட்டரியை நடத்திக் கொண்டிருந்த இன்றைய சூழலியலாளர் ஐங்கரநேசன் தமது டியூட்டரி மாணவர்களை இணைத்து 'தேனீக்கள்' என்று ஒரு தொண்டு நிறுவனம் போன்ற கட்டமைப்பை ஏற்படுத்தியிருந்தார். அந்த அமைப்பின் உறுப்பினர்களே கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை துப்புரவு செய்தார்கள் என்று ஒரு நினைவு எனக்கு உண்டு.

முதல் போராளியின் வித்துடல் அவரது சமய முறைப்படி கோப்பாயில் எரிக்கப்பட்டது. புதைக்கப்படவில்லை. தங்களின் பாரம்பரிய சொந்த மயானத்திலிருந்து அந்தப் போராளியின் வித்துடலை கோப்பாயில் மாவீரர்களுக்கு எனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மயானத்திற்கு எடுத்து வருவதற்கு அந்த மாவீரரின் பெற்றோருக்கு ஆரம்பத்தில் நீண்ட விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டி இருந்தது என்று அறிகிறேன்.

கோப்பாயில் அமைக்கப்பட்ட மாவீரர் மயானம் மற்றும் அங்கு எரிக்கப்பட்ட முதல் போராளியின் இறுதி நிகழ்வு போன்றவற்றை வீடியோ ஒளிப்படக் காட்சியாக பார்த்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், தமது யோசனையாக போராளிகளை எரிக்காமல் அவர்களது வித்துடல்களை விதைத்து, தமிழர் மரபுப்படி நடுகற்களை நடுவோம் என்று முடிவெடுத்தார். அச்சமயத்தில்தான் 'மாவீரர் துயிலும் இல்லம்' என்று பெயரிடும் முடிவும் எடுக்கப்பட்டதாக நான் அறிந்தேன்.

அதற்கு முன்னர் அந்த விடயம் பற்றிய செய்திகளில் 'மாவீரர் துயிலும் இல்லம்' என்று குறிப்பிடாமல் 'மாவீரர் மயானம்' என்று குறிப்பிட்ட ஞாபகம் எனக்கு உண்டு.

மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைக்கப்பட்டதும் மாவீரர் தின நிகழ்வுக்கான மையங்களாக அவை மாறின. ஆரம்பத்தில் மாவீரர் துயிலும் இல்லங்களின் முற்பகுதியில் அமைக்கப்படும் வளைவுகள் மாவீரர் தின வாரத்தில் முக்கிய வீதிகள், சந்திகளிலும் அமைக்கப்பட்டன.

யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளராக ராஜன் இருந்த காலத்திலேயே இந்த விடயங்களும் முன்னெடுக்கப்பட்டன. அப்போது மாவட்டத்தில் ஆங்காங்கே பொது மக்களால் அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மாவீரர்களின் படங்களுடன் அமைக்கப்படுகின்ற சிறந்த – உணர்வுபூர்வமான – வளைவுகளுக்கு பரிசளிக்கும் திட்டமும் முன்னெடுக்கப்பட்டது. அத்தகைய வளைவுகளை பார்வையிட்டு, அவற்றுக்கான புள்ளிகளைக் கொடுத்து, உரிய தெரிவுகளைச் செய்யும் பணியில் 'தேனீக்கள்' அமைப்பின் நிர்வாகி ஐங்கரநேசனும் ஈடுபட்டிருந்தார் என்ற ஞாபகம் இருக்கின்றது.

இப்போது மாவீரரை நினைவு கூரும் இந்த மாதத்தில் அது பற்றிய பழைய நினைவுகளை எங்கோ ஓரிடத்தில் பதிய வேண்டும் என்பதற்காக இங்கு பரிமாறினேன். அவ்வளவுதான்.

## டிரக்டர் மோதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் துயரச் சம்பவம் பொலனறுவை, வெலிகந்த – அசேலபுர பகுதியில் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி சிறுவன் வீதியைக் கடக்க முற்பட்டபோது, எதிரே வந்த டிரக்டர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் டிரக்டரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குறுகிய காலப் பகுதிக்குள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய வேலைத்திட்டங்கள் வரவு – செலவுத் திட்டத்தில் இல்லை. உறுதிமொழிகள் இடம்பெற்றிருந்தாலும் அவற்றை நிறைவேற்றுவதற்குரிய வழிகாட்டல் இல்லை. இலக்கங்களைக் குறிப்பிடலாம். அதனை அடைவதற்குரிய வேலைத்திட்டமும் பாதீட்டில் இல்லை.

ஆக மொதத்தத்தில் எவ்வித அடிப்படையும் இன்றி மக்களை ஏமாற்றுவதற்காக முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டமே இதுவாகும்." – என்றார்.



# சுவிஸ் தூதுவர் - ரில்வின் சில்வா சந்திப்பு!

ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவை இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் சந்தித்துப் பேசியுள்ளார்.

பத்தரமுல்ல,பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இலங்கை நாடாளுமன்றக் குழுவொன்று சுவிட்சர்லாந்துக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரக முதல்நிலைச் செயலர் ஜஸ்டின் பொய்லெட்டும் கலந்து கொண்டுள்ளார்.

# மாதத்தின் முதல் 5 நாள்களில் மாத்திரம் 32 ஆயிரம் சுற்றுலாப்பயணிகள் வருகை



நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்த மாதத்தின் முதல் 5 நாள்களில் மாத்திரம், 32 ஆயிரத்து 815 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

அவர்களில் அதிகளவானோர் இந்தியாவிலிருந்த வருகை தந்துள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், ரஷ்யா, ஜேர்மனி, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

# ஒரு வருடத்துக்கு முன்னர் கொலை செய்யப்பட்டவர் நேற்று கழிப்பறைக் குழியிலிருந்து சடலமாக மீட்பு!

கம்பஹா, இந்துருகல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் வளாகத்தில் கொலை செய்யப்பட்டு கழிப்பறைக் குழியினுள் போடப்பட்டிருந்த ஒருவரின் சடலம், நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்று பொலிஸாரால் தோண்டி எடுக்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் இந்துருகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய திருமணமான நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை கடந்த 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி இடம்பெற்றுள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்த நபர் காணாமல்போனமை தொடர்பில் அவரது சகோதரர் கம்பஹா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சுமார் ஒரு வருட கால விசாரணைக்குப் பின்னர் வெளியான தகவல்களின் அடிப்படையில், பொலிஸார் நேற்றுமுன்தினம் மூன்று பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கொலையின் பின்னணி அம்பலமானது.

கொலை செய்யப்பட்ட நபரும் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் ஒன்றாகச் சேர்ந்து மது விருந்து நடத்தியுள்ளனர் என்றும், அதன்போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதையடுத்து இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்றும் விசாரணையில் தெரியவந்தது.

பின்னர் சடலத்தைக் கழிப்பறைக் குழியில் போட்டு மூடியதாகச் சந்தேக நபர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பூகொடை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவர்களை மூன்று நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கதை விடும் ஜனாதிபதி

வெறும் வாய்ப் பந்தலால் காரியம் சாதித்து விட முடியாது. வெறும் கை முழம் போட்டுப் பயனில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தில் அவர் விடுத்த அறிவிப்புகள், வெறும் கை முழம் போடும் திட்டங்கள் போலவே தோன்றுகின்றன.

எதோ மிக வலிமையான - உறுதியான - சுபீட்சம் தருகின்ற - பொருளாதாரத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி விட்டவர் என்பது போல நாட்டின் நிதி நிலைமை மீண்டும் பலவீனமடையும் என்று எவரும் இனி கனவு காணக்கூடாது என இறுமாப்புப் பாணியில் கூறுகின்றார் அவர்.

இலங்கையின் நெருக்கடிக்கு முந்திய பொருளாதாரத்தை - 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் - அதாவது இன்னும் ஒன்றரை மாதங்களுக்குள் - மீட்டெடுக்கத் தமது அரசாங்கம் இலக்கு வைத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது முந்திய கணிப்புகளை விட நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக கிடைக்கும் பெறுபேறு என்றும் அவர் புளகாங்கிதம் தெரிவித்திருக்கின்றார்.

நல்லது. இவை எல்லாம் செயலில் உருப்படுமானால் பாராட்டத் தக்கவைதான். ஆனால் 'மந்திரத்தில் மாங்காய் விழுத்துவது போல' அவர் பல விடயங்கள் குறித்து மாயாஜாலப் பேச்சுப் பேசி இருக்கின்றார்.

பண வீக்கத்தை 5 சதவீதத்திற்கும் குறைவாகப் பராமரிக்கவும், நாட்டின் நெருக்கடிக்குப் பிந்திய பொருளாதார மீட்சியை விரைவு படுத்தவும் இந்த வரவு - செலவுத் திட்டம் வழிவகுக்கும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

2022 ஏப்ரலில் ஏற்பட்ட பொருளாதார வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த நெருக்கடி கால வரவு - செலவுத் திட்டத்தை ஒட்டியதாகவே இப்போதைய வரவு - செலவு திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அச்சமயத்தில் வேறு வழி இன்றி சர்வதேச நாணய நிதியத்தின் காலில் விழவேண்டிய நெருக்கடி இலங்கை ஆட்சிப் பீடத்துக்கு ஏற்பட்டது. அந்தப் பின்புலத்தில் சர்வதேச நாணய நிதியம் நெறிப்படுத்தும் வழிகாட்டலில் அதற்கு இயைபாக இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

மக்களுக்கு சலுகை எதுவும் வழங்காமல், சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் விதத்தில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிடுகின்றமை போலவே இந்த திட்டம் அமைந்துள்ளது.

கடந்த 2022 ஏப்ரல் முதல் வெளிநாட்டுக் கடன் தவணை பணத்தை செலுத்தாமல் நிறுத்தியுள்ள இலங்கை 2028 இலிருந்து மீள ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படையில் கடன் தவணைக் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டி இருக்கும்.

அதற்கான நிதி சேமிப்பை இலங்கை இன்னமும் தயார் படுத்தவில்லை. அத்தகைய கடன் மீளளிப்பை இலங்கை செய்வதாயின் தன்னுடைய பொருளாதரத்தை ஏற்றுமதியை நோக்கிய திசையில் நெறிப்படுத்த வேண்டும்.

அதற்கான மார்க்கம் எதுவும் இப்போது சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவு திட்டத்தில் இருப்பதாகவும் தெரியவில்லை.

இந்தப் பின்புலத்தில் இலங்கையின் நிதி நிலைமை மீண்டும் பலவீனமடையும் என்று எவரும் இனிக் கனவு காணக்கூடாது என்று தாம் கனவு நிலையில் இருந்து கொண்டு கதை விடுகின்றார் ஜனாதிபதி. அவ்வளவுதான்.




# கல்முனை தமிழர் பகுதிகளில் மீண்டும் காணி அபகரிப்பா?

## ஊடக சந்திப்பில் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆவேசம்

(வி.ரி.சகாதேவராஜா)

“கல்முனை வடக்கு தமிழர் பிரதேசங்களில் மீண்டும் காணி ஆக்கிரமிப்பு தொடர்கின்றதா? இன, மத பேதமற்ற அரசு எனக் கூறும் அநுர அரசு இத்தகைய சட்ட விரோத இனவாத காணி ஆக்கிரமிப்பை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.”

– இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் சமூகச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கல்முனை இலங்கை வங்கி சந்தியில் மேற்குப் புறமாகவுள்ள வீதியோரத்தில் சுதேச உணவு வழங்கும் கடைத்தொகுதி கட்டுவதற்கு, தனியாரும் கல்முனை தெற்கு பிரதேச செயலக அரச அலுவலர்களும் வந்து கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வந்த சம்பவத்தை அடுத்து இந்தப் பதற்ற நிலை தோன்றியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து, கல்முனை ஊடக மையத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் பிரபல சமூகச் செயற்பாட்டாளர்களான முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், தா. பிரதீபன், மாதர் சங்கத் தலைவி திருமதி எஸ். நித்தியகைலேஸ்வரி ஆகியோர் ஊடகங்களுக்கு ஆக்ரோஷமாக விளக்கம் அளித்தனர்.

இது பற்றி சமூகச் செயற்பாட்டாளர் சந்திரசேகரம் ராஜன் விளக்கம் அளிக்கையில்,

“கல்முனை வடக்கு எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இவ்வாறு கட்டுமானப் பணியை மேற்கொள்வதாயின் முதலில் பிரதேச செயலாளரிடம் அனுமதி பெறப்பட்டதா? இல்லை.

முதலில் ஒருவர் வந்தார். 30 வருட காணி உரிமை இருக்கின்றது என்றார். எங்கே என்று கேட்டவுடன் திரும்பிப் போய்விட்டார்.

பின்பு கல்முனை முஸ்லிம் பிரதேச செயலக அதிகாரிகள் வந்தார்கள். கடை கட்ட எங்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை அனுமதி இருக்கின்றது என்றார்கள். நான் உடனடியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளரைச் சந்தித்தேன். கட்டுமானத்துக்கு அல்ல கண்டைனர் வைத்து தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கி இருக்கின்றோம் என்றார்.

அண்மையில் வீரமுனையில் வீதிக்குச் சொந்தமான இடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானம் எடுக்கப்பட்டும், ஒரு பெயர்ப்பலகையைக் கூட நாட்ட முடியாத இந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை இன்று இதற்கு அனுமதி வழங்கி இருக்கின்றதாம்.

அங்காடிக் கடைகளை வைக்கக் கூடாது, பெட்டிக்கடைகளை வைக்கக் கூடாது என்று எழுப்பி வருகின்ற நிலையில் இந்த இடத்தில் இந்த வியாபாரத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கி இருக்கின்றதா?

இந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள் மற்றும் மாகாணப் பணிப்பாளர் இன ரீதியாகச் செயற்படுகின்றார்களா? அல்லது வேண்டும் என்றே தமிழ் மக்களைப் புறக்கணிக்கின்றார்களா?

இன, மதவாத மற்ற அநுர அரசிடம் இவர்களது இனவாதப் போக்கை முன்வைத்து நீதிமன்றங்களுக்குச் செல்ல இருக்கின்றோம்.

இது ஒரு நீரேந்துப் பகுதி என்பது சகல இன மக்களுக்கும் தெரியும். இதனைத் தடுத்தால் கடந்த காலங்களைப் போல் மீண்டும் வெள்ளம் அந்தப் பிரதேசம் எல்லாம் நிரம்பும். ஆகவே, இந்தச் செயற்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும்.

கல்முனையில் உள்ள சந்தாங்கேணி மைதானம் நானறிந்த வகையில் குளமாகத்தான் இருந்தது. இன்று அது மைதானமாக மாறி இருக்கின்றது.

கல்முனை தமிழர் பிரதேசம் நகரத்தில் நரகமாக இருக்கின்றது. ஒழுங்கான வீதிகள் இல்லை. மின்விளக்குகள் இல்லை. அதைக் கேட்பாரும் இல்லை பார்ப்பாரும் இல்லை.

விரைவில் தேர்தல் வருகின்றது. அதற்காக இந்த இனவாதச் செயற்பாட்டை முன்னெடுக்கின்றார்கள்.

ஆகவே, தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் இதற்குப் பின்னால் சிக்கிவிடக் கூடாது.

எனவே, மக்கள் விரும்பாத இந்த கட்டுமானப்பணியை உடனடியாக நிறுத்த வேண்டும்.”– என்றார்.

மற்றுமொரு சமூகச் செயற்பாட்டாளர் தா.பிரதீபன் கூறுகையில்,

“கல்முனையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நீரேந்துப் பகுதியில் இவ்விதம் உரிய அங்கீகாரம் அனுமதி பெறப்படாமல் கட்டுமானப் பணியை முன்னெடுக்க முயல்வது இங்குள்ள அமைதியைக் குழப்பும் செயல் ஆகும்.

இது தேவையற்ற ஒன்று. இது அரசியல் திட்டமாக இருந்தால் இதற்கு எப்போது ரெண்டர் போல் பண்ணினார்கள்? யாருக்கு ரெண்டர் வழங்கினார்கள்? ஏன் இந்த அரச உத்தியோகத்தர்கள் விடுமுறை நாட்களில் இங்கு வர வேண்டும்? என்ற கேள்வி எல்லாம் எழும்புகின்றன.

ஏலவே இந்த இடத்தில் நாவிதன்வெளி பிராந்திய மக்கள் பயன்படுத்துவதற்காகப் பஸ் தரிப்பிடம் ஒன்றை அமைக்க முற்பட்டபோது நீர்ப்பாசனத் திணைக்களம் அதற்கு அனுமதி மறுத்தது. காரணம் இங்கு ஏதாவது கட்டுமானம் இருந்தால் நீர் வழிந்தோடுவது

தடுக்கப்பட்டு இந்தப் பகுதி எல்லாம் வெள்ளமாகும் என்றார்கள். அது உண்மைதான்.

ஆனால், அதே நீர்ப்பாசன திணைக்களம் இன்று எவ்வாறு இந்தக் கடைத்தொகுதிக்கு அனுமதி வழங்கியது?– என்று கேட்கின்றோம்

இந்த நில ஆக்கிரமிப்பு தொடர்பாக உரிய அரச அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்தோம். ஆனால், இதுவரை யாரும் வந்து பார்க்கவில்லை. ஏலவே வாடி வீட்டுப் பகுதியில் மண் நிரப்பப்பட்டது. கடற்கரையில் தோணாப் பகுதி நிரப்பப்பட்டது. இவற்றையெல்லாம் நாம் தடுத்தோம். பாண்டிருப்பு எல்லையில் முஸ்லிம் அரச உயர் அதிகாரி ஒருவர் நில ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டார். அதைத் தடுத்தோம்.

ஆனால், இன்று மீண்டும் புது வடிவில் இது நகருக்குள் வருகின்றது. இதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.”– என்றார்.

மாதர் சங்கத் தலைவி திருமதி நித்யா கூறுகையில்,

“கல்முனை தமிழ்ப் பிரதேசம் தொடர்ச்சியாக நில ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருவதை உலகறியும். பல தடவைகளில் நாங்கள் முன் நின்று தடை செய்திருந்தோம் .

இது பற்றி பொலிஸ் நிலையம், நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற அரச நிறுவனங்களுக்கு முறையான அறிவிப்பு முறைப்பாடுகளை கொடுத்தும் யாருமே வந்து பார்க்கின்றார்கள் இல்லை.

எனவே,இந்த அபகரிப்புக்கு அவர்கள் துணை போகின்றார்களா? என்று கேட்கின்றோம்.

இந்த இடத்தில் இப்படியான சுதேச உணவு விற்கும் கடை வைப்பதானால் அதற்கு எமது கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் கிராம சேவையாளர் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் சொன்னார்களா?

கல்முனை தமிழ் மக்கள் சொல்லொணாக் கஷ்டப்படுகின்றார்கள். பலவித அடக்குமுறைகள், பாரபட்சம், புறக்கணிப்புகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாக உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள்.

இதற்கெல்லாம் காரணம் ஆதம்பாவா எம்.பிதான் என்று அறிகின்றோம். எது எப்படி இருப்பினும் நாங்கள் உயிர் போகும் வரை இதனை விட மாட்டோம்.”

– என்றார்.

# மகாத்மா காந்தி எதிர்கொண்ட போரை தற்போது காங்கிரஸ் எதிர்கொள்கிறது

## பிரியங்கா காந்தி கூறுகின்றார்




ஒரு காலத்தில் மகாத்மா காந்தி எதிர்கொண்ட அதே போரை இன்று காங்கிரஸ் எதிர்கொள்கிறது என பிரியங்கா காந்தி வத்ரா தெரிவித்துள்ளார்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு கட்டிஹார் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வத்ரா,

“பிரதமர் மோடி தனது பதவிக்கான கண்ணியத்தைப் பேணவில்லை. ஒருபக்கம் அவர், அகிம்சைக்கான வந்தே மாதரம் பாடலை புகழ்ந்து பேசுகிறார். மறுபக்கம், நாட்டு துப்பாக்கி பற்றிப் பேசுகிறார்.

ஒரு காலத்தில் மகாத்மா காந்தி எதிர்கொண்ட அதே போரை இன்று காங்கிரஸ் எதிர்கொள்கிறது. தற்போது நாங்கள் உங்கள் உரிமைகளுக்காக, உண்மைக்காக, ஒரு பேரரசுக்கு எதிராக நாங்கள் போராடுகிறோம். அதுதான் நரேந்திர மோடி பேரரசு. மக்களை அடக்குவதன் மூலம் அவர் நாட்டை வழிநடத்துகிறார். அவரது கட்சி வதந்திகளைப் பரப்புகிறது.

மகாத்மா காந்தி போராடிய உரிமைகளில் ஒன்று வாக்குரிமை. அரசியலமைப்பைப் பலவீனப்படுத்த பா.ஜ.க. அனைத்தையும் செய்கிறது. அவர்கள் வாக்குரிமையைத் திருடத் தொடங்கிவிட்டார்கள். இந்த வாக்குத்திருட்டில் அவர்களுக்கு மூன்று பேர் துணை நிற்கிறார்கள்.

ஞானேஷ் குமார், விவேக் ஜோஷி, எஸ்.எஸ்.சந்து ஆகிய தேர்தல் ஆணையத்தின் மூன்று மூத்த அதிகாரிகள் வெட்கமற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் அரசமைப்புக் கடமைகளை நிறைவேற்றவில்லை. பிஹாரில் 65 லட்சம் வாக்காளர்களின் வாக்குகளை அவர்கள் நீக்கிவிட்டார்கள். அவர்கள் தங்கள் பதவிகளுக்குப் பின்னால் ஒளிந்துகொள்ள அனுமதிக்க வேண்டுமா? ஓய்வுக்குப் பிறகு அவர்கள் சொகுசான வாழ்க்கை வாழ்வது நல்லதா? மக்கள் அவர்களை மறக்க வேண்டுமா?

அரசமைப்பையும் நாட்டையும் காட்டிக் கொடுத்தவர்களை மக்கள் மறக்க வேண்டுமா அல்லது நினைவில் கொள்ள வேண்டுமா? பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரின் பெயருடன் சேர்ந்து இந்த மூன்று பெயர்களையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.” என தெரிவித்தார்.

# த.வெ.க. கூட்ட நெரிசல் உயிரிழப்பு வழக்கு; பிரசார வாகன கமரா பதிவு ஒப்படைப்பு



கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக த.வெ.க. பிரசார வாகனத்தின் கமரா பதிவு, ஆவணங்கள் சி.பி.ஐ. அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

கரூரில் த.வெ.க. பிரச்சாரக்கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இது தொடர்பாக 300 இற்கும் மேற்பட்டோருக்கு அழைப்பாணை அனுப்பி, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

த.வெ.க. பிரச்சார வாகனத்தில் இருந்த கமரா பதிவுகள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களின் விவரங்களை அளிக்குமாறு, பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் கடந்த 2 ஆம் திகதி சி.பி.ஐ. அதிகாரிகள் அழைப்பாணை அளித்திருந்தனர்.

இதையடுத்து, கரூர் சுற்றுலா மாளிகையில் தங்கியுள்ள சி.பி.ஐ. அதிகாரிகளிடம், சி.சி.ரி.வி. கேமரா பதிவுகள் அடங்கிய காணொலிகள், நிகழ்ச்சியில் பங்கேற்றோரின் விவரங்கள் அடங்கிய ஆவணங்களை த.வெ.க. வழக்கறிஞர் அரசு, பனையூர் அலுவலக உதவியாளர் குருசரண் உள்ளிட்டோர் நேற்று ஒப்படைத்தனர்.



# பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையிலான அமைதி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது

இஸ்தான்புல்லில் நடந்து வந்த பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அமைதி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது.

கடந்த மாதம் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத கும்பலை குறிவைத்து பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. அதில் 206 பேர் பலியாகினர்.

அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக தலிபான் நடத்திய தாக்குதலில் 23 வீரர்கள் பலியாகினர். இதனால் இரு நாடுகளுக்கும் இடையே மோதல் வெடித்தது.

எனினும் கட்டார், துருக்கி நாடுகள் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கின. துருக்கியின் இஸ்தான்புல் நகரில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அமைதிப் பேச்சுவார்த்தை நடந்தது.

ஆனால், இந்த அமைதிப் பேச்சுவார்த்தையின் சமீபத்திய சுற்று உடன்பாடு இல்லாமல் முறிந்துள்ளது. இது இரு அண்டை நாடுகளுக்கும் இடையிலான அவநம்பிக்கையை ஆழமாக்கியுள்ளது என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில், பாகிஸ்தானின் பொறுப்பற்ற அணுகுமுறையே இத்தோல்விக்கு காரணம் என்றும், ஆப்கானிஸ்தான் மீதான எந்தவொரு தாக்குதலுக்கும் உரிய பதிலடி கொடுப்போம் எனவும் ஆப்கானிஸ்தான் அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது.

# ரஷ்ய எண்ணெய் தடையில் இருந்து ஹங்கேரிக்கு விலக்களித்தார் ட்ரம்ப்



ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதற்கு விதிக்கப்பட்ட தடையில் இருந்து ஹங்கேரிக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விலக்களித்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பன், வெள்ளை மாளிகையில்ஜனாதிபதிடொனால்ட்ட்ரம்ப்பைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதையடுத்து, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதற்கு விதிக்கப்பட்ட தடையில் இருந்து ஹங்கேரிக்கு விலக்கு அளிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார்.

இரண்டாவது முறையாகட்ரம்ப்ஜனாதிபதியான பிறகு அவரை, வெள்ளை மாளிகையில் விக்டர் ஓர்பன் சந்திப்பது இதுவே முதல்முறை. ட்ரம்ப்பின் அறிவிப்பு, இரு தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முக்கிய விளைவு என்று ஹங்கேரி வெளியுறவு அமைச்சர் பீட்டர் சிஜ்ஜார்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“எண்ணெய் மற்றும் எரிவாயு மீதான தடைகளில் இருந்து அமெரிக்கா ஹங்கேரிக்கு முழுமையான மற்றும் வரம்பற்ற விலக்கு அளித்துள்ளது. ஹங்கேரியின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யும் இந்த முடிவுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.” என தெரிவித்துள்ளார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசியடொனால்ட்ட்ரம்ப், ”நிலத்தால்சூழப்பட்ட நாடு ஹங்கேரி என்பது உங்களுக்குத் தெரியும். கடல் இருப்பதால் கிடைக்கும் நன்மைகள் அவர்களுக்கு இல்லை. அவர்கள் எரிவாயுவுக்கு குழாய்களை நம்பி இருக்கிறார்கள். இதில், பெருமளவு அவர்கள் ரஷ்யாவை நம்பி இருக்கிறார்கள்” என தெரிவித்திருந்தார்.

விக்டர் ஓர்பன் கூறும்போது, “நாங்கள் குழாய் மூலம்தான் எரிவாயுவைப் பெறுகிறோம். சித்தாந்தத்துக்கோ அரசியலுக்கோ இதில் இடம் இல்லை. இது முழுக்க முழுக்க யதார்த்தம் தொடர்புடையது. ஏனெனில், எங்களுக்கு துறைமுகங்கள் கிடையாது” என கூறி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சாணக்கியன் எம்.பியின் தந்தையாரின் பூதவுடலுக்கு அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் நேரில் அஞ்சலி!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசா மாணிக்கம் சாணக்கியனின் தந்தையார் மருத்துவர் இராஜபுத்திரன் இராசாமாணிக்கம் நேற்றுமுன்தினம் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று பிற்பகல் 2 மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளது. பூதவுடலுக்கு அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். பூதவுடல் இன்று மாலை 6 மணியளவில் பொரளை பொது மயானத்தில் எரியூட்டப்படும்.











# மக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திக்கு யாருமே உரிமை கோர முடியாது!

## பிரதேச சபை தவிசாளர் பாஸ்கரன் காட்டம்

(வடிவேல் டினேஸ்)

அரசாங்கத்தால் இடம் பெறும் அபிவிருத்திகள் மக்கள் வரிப்பணத்தில் இடம் பெறுவதால் அதனை யாரும் உரிமை கோர முடியாது என காரைதீவு பிரதேச சபை தவிசாளர் பாஸ்கரன் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவ்சி வருமாறு:-

அரசாங்கம் என்பது மக்களுக்கானது. இங்கு இடம் பெறும் அனைத்து அபிவிருத்திகளும் மக்களது வரிப் பணத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

எனது பிரதேசத்தில் உள்ள ஒரு பிரஜை கடை ஒன்றில் ஏதாவது ஒரு பெருள் வாங்கினால் அதற்கு வரி அரசாங்கத்திற்கு செல்கின்றது. அவ்வாறான மக்கள் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக்கு ஆளும் கட்சி, எதிர்கட்சி என யாரும் உரிமை



கோர முடியாது என தெரிவித்தார்.

ஓர் அபிவிருத்தி பணிக்கான நிதி அரச முறைப்படி பிரதேச செயலகதிற்கும் பிரதேச சபைக்கும் கிடைக்கும். அதனை அரச நிறுவனங்கள் முன்னின்று செயற்படுத்தும். ஆனால் இங்கு அபிவிருத்தியை நாங்கள்தான் கெண்டு வந்தோம் என உரிமை கோருவது சிறு பிள்ளைத் தனமான செயலாகும்.

ஆதி காலத்தில் மன்னர்கள் அபிவிருத்தி செய்ததை போல தற்போது அரசாங்கம் அபிவிருத்தி மேற்கொள்கின்றது.

வட கிழக்கு இணைந்த ஒரு தீர்வுத் திட்டம் என்ற அடிப்படையில் எங்களது கட்சி கொள்கை அடிப்படையில்தான் நாங்கள் செயற்படுகின்றோம்.

எனது பிரதேச எல்லைக்குள் இடம் பெறும் அபிவிருத்தி பணிகள் குறித்து ஒரு தவிசாளராக எனக்கு தெரியப்படுத்த வேண்டும் ஆனால் என்னிடம் தெரிவிக்காமல் பல அபிவிருத்தி பணிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

சமீபத்தில் காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட காரைதீவு - அம்பாறை வீதியில் அமைந்துள்ள பெரிய பாலத்திற்கான அபிவிருத்தி பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால் தவிசாளராகிய எனக்கு அபிவிருத்தி பணிகள் தொடர்பாக அறிவிக்கவில்லை.

எங்களது நோக்கம் அபிவிருத்தியும் இடம் பெற வேண்டும், அதே வேளை எங்கள் கட்சி கொள்கை அடிப்படையில் செயற்பட வேண்டும். யாரும் சொந்த பணத்தில் அபிவிருத்தி செய்யவில்லை. மாறாக மக்கள் பணம் என்பதை உணர வேண்டும்.- என்றார்.

# வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் கூட தேசிய மக்கள் சக்திக்கே மக்கள் ஆதரவு

## வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் உறுதி

(கி.வசந்தன்)

கடந்த இரு தேர்தல்களைப் போல் வரவிருக்கும் வடக்கு மாகாண சபை தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி மக்களுடைய ஆதரவைப் பெறும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

எமது அரசாங்கத்தைப் பொறுத்தவரை கிராமப் புறங்களை அடிப்படையாகக் கொண்டு அதன் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு கட்டமாகவே கிராமப் புற வீதிகளை புனரமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

எமது ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வட மாகாணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருவது யாவரும் அறிந்த விடயம். 2026ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் வடக்கு மாகாணத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

30 வருட யுத்தத்தினால் உட்கட்ட



மைப்பு வசதிகள் அழிந்து பாதிக்கப்பட்ட வட மாகாணத்தை கடந்த கால அரசாங்கங்கள் புறக்கணித்த நிலையில் எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வட மாகாணத்திற்கு அதிக நிதியை ஒதுக்கி உட்கட்டமைப்பை விருத்தி செய்கிறது. இதைவிட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2026 இறுதியில் நடைபெற வாய்ப்புக்கள் உள்ளது. இந்த தேர்தலுக்காக கடந்த காலங்களில் மக்களை ஏமாற்றிய அதே கட்சிகள் மீண்டும் ஒன்றிணைய போகின்றன எனக் கூறியுள்ளன. இதனை நினைக்கும் போது வேடிக்கையாகவுள்ளது. இவர்கள் இணைய நினைப்பது தேர்தலுக்காக மட்டுமே.

அவர்கள் தமிழ் மக்களுக்காக ஒற்றுமைப்படுவதாக இருந்தால் தேர்தல் இல்லாத காலத்திலும் ஒற்றுமைப்பட்டு தமிழ் மக்களது உரிமைகளைப் பெறப் போகிறார்கள் எனக் கூறலாம். எவ்வாறாயினும், எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கில் மக்களது ஆதரவை கடந்த தேர்தல்களில் காட்டியுள்ளது. அதேபோல் வரவிருக்கும் மாகாண சபை தேர்தலிலும் மக்களுடைய ஆதரவைப் பெறும். நாம் இதய சுத்தியுடன் வடக்கு மாகாண மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகிறோம்.

2009இற்கு முன்னர் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை இவ்வாறு இருக்கவில்லை. ஆனால் அதற்கு பிற்பாடு திட்டமிட்டு பரப்பப்பட்டுள்ளது. கடந்தகால அரசாங்கங்கள் இதனைச் செய்துள்ளன. எமது அரசாங்கம் வடக்கில் அதனை கட்டுப்படுத்தி இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் சட்டவிரோத நிதியீட்டங்கள், மறைக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. - எனத் தெரிவித்தார்.





# தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலியுடன் சிரமதான பணி ஆரம்பம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கும் நடவடிக்கையில் மக்கள் மற்றும் பணிக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் ஆ பகுதி மாவீரர் துயிலும் இல்லம் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் மக்கள் நேற்றையதினம் ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 11இற்கும் மேற்பட்ட இடங்களில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன.

கார்த்திகை 27 இல் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் சென்று தமிழர்களின் விடிவிற்காக உயிர்நீர்த்த மாவீரர்களை நினைவிற்கொண்டு வருகின்றார்கள்.

இந்தநிலையில், மணலாறு மாவீரர் துயிலும் இல்லம், களிக்காடு மாவீரர் துயிலும் இல்லம், அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம், ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், தேராவில் மாவீரர் துயிலும் இல்லம், தேவிபுரம் ஆ பகுதி மாவீரர் துயிலும் இல்லம், முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம், இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லம்,வன்னி விளாங்குளம், இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால் போன்ற மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்படுகின்றன.














# வவுனியாவில் சனசமூக நிலையங்களிற்கு தலா ரூ.10 ஆயிரம் காசோலை வழங்கல்

**(கி.வசந்தன்)**

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கீழ் உள்ள சனசமூக நிலையங்களிற்கு காசோலை வழங்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் பா.பாலேந்திரனால் 36 சனசமூக நிலையங்களிற்கு தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதேச சபை செயலாளர் மற்றும் சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.















# சமூக மாற்றத்திற்கான ஊடக மையத்தின் ஏற்பாட்டில் நேற்றும் பனம் விதை நடுகை

சமூக மாற்றத்திற்கான ஊடக மைய்யத்தின் ஏற்பாட்டில் சமூக விஞ்ஞான ஆய்வு மையமும், சமூக ஆர்வலர் ஒன்றியமும் இணைந்து பனம் விதை நடுகையை நேற்றைய தினம் வடமராட்சி கிழக்கு கொட்டோடை பகுதியில் மேற் கொண்டன.

இப் பனம்விதை நடுகையில் சமூக விஞ்ஞான ஆய்வு மைய்ய இயக்குந ரும், சட்டத்தரணியும், அரசியல் ஆய் வாள ருமான சி.அ.யோதிலிங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மைய செயற் பாட்டாளர்களான பகீரதன், கமல காந்தன், மரியசீலன்,

ஜனநாயக போராளிகள் கட்சி தலை வர் சி.வேந்தன், சமூக மாற்றத்திற்கான ஊடக மைய ஊடகவியலாளர்களான சி.த.காண்டீபன், பூ.லின்ரன் உட்பட பலரும் கலந்துகொண்டு பனம்விதை களை நாட்டிவைத்தனர்.



# மாவீரர்கள் துயிலும் இல்லங்களிலிருந்து ராணுவம் வெளியேறினால்தான் நல்லிணக்கம் சாத்தியமாகும்

## ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் தெரிவிப்பு

(பூ.லின்ரன்)

நல்லதொரு புரந்துணர்வு இனங்களுக்கிடையில் ஏற்பட வேண்டுமாக விருந்தால் மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவம் அகன்று செல்ல வேண்டும் என்று ஜனநாயகப் போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று வடமராட்சி கிழக்கில் தாம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கார்த்திகை மாதம் என்பது தேச விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கியவர்களை நினைவு கூருகின்ற மாதமாகும்.

அந்த வகையிலே கார்த்திகை 21 தொடங்கம் 27ஆம் திகதிவரை மாவீரர் வாரமாக தாயகத்திலும் புலம்பெயர்ந்த தேசமெங்கிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வருட மாவீரர் நினைவேந்தல் சிறப்பாக நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. புலம்பெயர் தேசங்களிலும் அந்தந்த நாடுகளிலும் மாவீரர் நினைவேந்தல் இடம் பெறுவதற்க்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தாயகத்திலே ஒரு சில மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவத்தினர் அகன்றிருக்கின்றனர். கணிசமான மாவீரர் துயிலுமில்லங்களில் இராணுவ முகாம்கள் உள்ளன.



இதனால் ஒவ்வொரு வருடமும் மாவீரர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சுதந்திரமாக நினைவேந்தல் செய்வதற்காக மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கின்றோம். அந்த வகையிலே இந்தவருடமும் மாவீரர் வாரத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு எஞ்சியிருக்கின்ற மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி ஒரு தேசிய நல்லிணக்கத்தோடு, விட்டுக்கொடுப்போடு இந்த வருடமும் மாவீரர்களை நினைவேந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

இரண்டு நாளகளுக்கு முன்பு கடற்றொழில் அமைச்சர் ஓர் அறிவித்தலை விடுத்திருக்கின்றார். மாவீரர் துயிலுமில்லங்களில் இருக்கின்ற இராணுவ முகாம்களை அகற்றுவதற்கான உத்தரவை ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளருக்கு கொடுத்திருக்கின்றார். எதிர்வரும் காலங்களில் மக்கள் சுதந்திரமாக மாவீரர்களை நினைவேந்தல் செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளதாக கூறியிருக்கின்றார்.

நாங்கள் அந்த கருத்தை வரவேற்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இது பேச்சளவிலே இல்லாமல் செயலளவிலே இருக்க வேண்டும் என்பது எங்களது கோரிக்கை.

மாவீரர் பெற்றோர்கள், உறவினர்கள், உரித்துடையோர் எல்லோரும் இந்த துயிலுமில்லங்களுக்கு அருகிலேதான் வசித்து வருகின்றனர். இவர்கள் மாவீரர் துயிலுமில்லங்களை கடந்து செல்கின்ற போது வலிகளோடும் வேதனைகளோடும்தான் கடந்து செல்கின்றனர்.

ஆகவே போரின் மீது ஒரு சமாதானத்தை கொண்டுவந்துள்ளோம் என்று கூறிவருகின்ற அரசாங்கம் மக்களது வேதனைகளை புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் தங்களது பிள்ளைகளது கல்லறைகளிலே தான் இராணுவம் ஏறி இருக்கினறது

என்ற மன வேதனையுடன்தான் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறானால் ஒரு தேசிய நல்லிணக்கம் வருவதற்குரிய வாய்ப்பே இல்லை. ஆகவே ஓர் இனம் இன்னொரு இனத்தின் மவீர்களது கல்லறைமீது ஏறியிருப்பது என்பது தேசிய நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நல்லதொரு புரந்துணர்வு இனங்களுக்கிடையில் ஏற்பட வேண்டுமாகவிருந்தால் நிச்சயமாக மாவீரர் துயிலுமில் லங்களிலிருந்து இராணுவம் அகன்று செல்ல வேண்டும். – என்றார்.







# ‘சிறகுகள் கட்டப்பட்ட சுதந்திரம்’ அதுவே இலங்கையில் நிலைமை

## உலக சுதந்திர தினத்தில் ஒரு விமர்சன பார்வை

“வானம் காணாத பறவை போல, சுதந்திரமற்ற மனிதன் வாழ்ந்தாலும் அவன் ஜடமே.” - என்பதற்கமைவாக ஒரு மனிதனின் வாழ்வில் சுதந்திரம் என்பது உயிர்க்காற்று போன்றது. சுதந்திரம் இல்லாத வாழ்க்கை ஒரு சிறையிலுள்ள பறவையைப் போன்றது. பறக்க விரும்பினாலும், அதன் சிறகுகள் கட்டப்பட்டிருக்கும். மனிதன் தனது எண்ணம், செயல், நம்பிக்கை, உரிமை ஆகியவற்றில் தன்னிச்சையாக வாழ்வதே சுதந்திரத்தின் உண்மையான அர்த்தமாகும்.

அதற்கமைய, சுதந்திரம் என்பது ஒரு பரிசு அல்ல; அது பல தலைமுறைகளின் தியாகத்தால் பெற்ற ஒரு பெருமைமிகு பொக்கிஷமாகும். ஒவ்வோர் ஆண்டும் கார்த்திகை 9 ஆம் திகதி உலக சுதந்திர தினம் (World Freedom Day), ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலையின் வெற்றியை, குறிப்பாக பெர்லின் சுவரின் வீழ்ச்சியை நினைவுகூரும் விதமாகமேற்கொள்ளப்படுகின்றது. இந்த தினம், மனித உரிமை, ஜனநாயகம், மற்றும் பயமற்ற வாழ்வின் மதிப்பை உலகிற்கு வலியுறுத்துகிறது.

ஒரு சுதந்திர நாடாக இலங்கை தன்னைச் சொல்லிக் கொண்டாலும் கூட, இங்குள்ள மக்களின் கருத்துச் சுதந்திரமும் (Freedom of Expression) வாழ்க்கைச் சுதந்திரமும் (Right to Life) நடைமுறையில் எத்தனை சவால்களை எதிர்கொள்கின்றன என்பது ஒரு விமர்சனப் பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்று.

இலங்கையின் அரசமைப்பு சட்டரீதியாகக் கருத்துச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளித்தாலும், நடைமுறையில் அது எப்போதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது.



ஜிந்துஜா விஜயகுமார்
(ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

அண்மைக்காலங்களில், சமூக ஊடகங்களில் ஒரு கருத்தை வெளியிடுவது, அரச கொள்கைகளை விமர்சிப்பது அல்லது நீதி கோருவது போன்ற செயற்பாடுகள் கூட சட்டரீதியான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றன.

அவதூறுச் சட்டங்கள், இணையப் பாதுகாப்புச் சட்டங்கள் போன்றவற்றின் பெயரால், பத்திரிகையாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சாதாரண குடிமக்களின் விமர்சனக் குரல்கள் நசுக்கப்படுகின்றன. இதன் விளைவாக, பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டுகிறார்கள். இது ஆரோக்கியமான ஜனநாயக விவாதத்திற்குப் பெரும் தடையாக உள்ளது. அமைதியான முறையில் ஒன்று கூடிப் போராடும் உரிமை கூட பல நேரங்களில், அதிகார பலத்தைப் பயன்படுத்தி ஒடுக்கப்படுகிறது.

இலங்கை போன்ற ஜனநாயக தேசத்தில், மக்களின் வாழ்க்கைச் சுதந்திரம் (Life and Liberty) என்பது மறுக்கமுடியாத அடிப்படை உரிமையாகும். இருப்பினும், இலங்கையின் அரசியல் மற்றும் சமூக நிலைமை பல குடிமக்களுக்கு, குறிப்பாக சிறுபான்மையினர் மற்றும் அரசியல் எதிர்ப்பாளர்களுக்கு அச்சத்தை அளிக்கிறது. சட்டத்தின் ஆட்சி (Rule of Law) பலவீனமடையும் போது, சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களின் செயற்பாடுகளில் ஏற்படும் முறைகேடுகளும், பொறுப்புக்கூறல் இன்மையும், தன்னிச்சையான கைதுகள், சித்திரவதைகள் மற்றும் பலவந்தமான காணாமல் ஆக்கப்படுதல்கள் போன்ற சம்பவங்களால், நமது அடிப்படை வாழ்க்கைச் சுதந்திரமே கேள்விக்குள்ளாகிறது.

இது மாத்திரமின்றி பொருளாதார நெருக்கடி, இனப்பிரச்சினைக் காலத்தின் வடுக்கள் மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மை ஆகியவை மக்களிடையே அச்சம் கலந்த ஒரு மனநிலையை (Climate of Fear) விதைத்துள்ளன. இதன் விளைவாக, மக்கள் தங்கள் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவோ அல்லது அநீதியை எதிர்த்து நிற்கவோ தயங்குகின்றனர்.

உலக சுதந்திர தினம் கொண்டாடப்படும் இந்த வேளையில், சட்டப் புத்தகங்களில் காணப்படும் சுதந்திரத்தை விட, நடைமுறை வாழ்வில் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரமே ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் உண்மையான அளவுகோல் என்பதை உணர வேண்டும். கருத்துச் சுதந்திரமும் வாழ்க்கைச் சுதந்திரமும் ஒன்றோடொன்று பிணைந்தவை. ஒன்று பாதிக்கப்பட்டால், மற்றொன்று நிலைபெறாது. உண்மையான விடுதலை என்பது, மிரட்டல்களுக்கு அஞ்சாமல், தங்கள் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் பேசும் தைரியம் குடிமக்களுக்கு இருக்கும் போதே அடைய முடியும். அந்த வகையில் இலங்கைக்கான உண்மையான சுதந்திரம் என்பது, அச்சத்தின் சுவர்கள் தகர்க்கப்பட்டு, நீதியின் அஸ்திவாரம் வலுப்பெறும் நாளிலேயே உதயமாகும்.

# இன்றைய ராசி பலன்கள்- 09.11.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மனநிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.





இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால்




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள்- 09.11.2025




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக் காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறு தலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன் களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும். இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறை யான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதற்றம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்தி றன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

# வாகனங்களின் குத்தகை வீதங்களை திருத்தியமைக்க மத்திய வங்கி முடிவு



வாகனங்களுக்குப் பொருந்தக்கூடிய அதிகபட்ச குத்தகை விகிதங்களை திருத்தியமைக்க இலங்கை மத்திய வங்கி முடிவு செய்துள்ளது.

அதன்படி, வணிக வாகனங்களுக்கான அதிகபட்ச விகிதம் 70 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன், தனியார் வாகனங்களுக்கான வரம்பு 50 சத வீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜூலை மாதம், மத்திய வங்கி வணிக வாகனங்களுக்கு 80 சதவீதம் வரை, தனியார் வாகனங்களுக்கு 60 சதவீதம் வரை, முச்சக்கர வண்டிக ளுக்கு 50 சதவீதம் வரை மற்றும் பிற வாகனங்களுக்கு 70 சதவீதம் வரை குத்தகை வசதிகளை அனுமதித்திருந் தது.

இருப்பினும், புதிய திருத்தத்தின் கீழ், ஜூலையில் அறிமுகப்படுத்தப்பட்ட நான்கு பிரிவுகள் இரண்டு முக்கிய குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, வணிக வாகனங்களுக்கான பிரிவொன்றும் சிற்றூந்து, சிற்றூர்தி, முச்சக்கர வண்டிகள் மற்றும் பிற வாகனங்களுக்கான பிரிவொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.